# ஞெலிகோல்

கையெழுத்து இதழ்



தட்டான் தாழப் பறந்தால்
தப்பாமல் மழை வரும்

அரசு மேனிலைப் பள்ளி, குளிக்கரை - 613704

## சிறப்பாசிரியர்

திரு. தி. நாகராஜன்,
தலைமை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி
கிளிக்கரை - 613 704
திருவாரூர் மாவட்டம்

## ஆசிரியர்

திரு. இரெ. சுப்பிரமணியன்,
முதுகலைத் தமிழாசிரியர்,

## இணை ஆசிரியர்

திருமதி. ந. மலர்க்கொடி,
பட்டதாரி தமிழாசிரியர்

## முன்அட்டை

வி. ராஜா, ஓவிய ஆசிரியர்

## பின் அட்டை

கை. சுடரொளி
பட்டதாரி ஆசிரியர்

## எழுத்தாக்கம்

மு. அனுசியா, 11 - கி.
மு. சூர்யாதேவி, 11 - கி
சு. பூரணிமுத்து, 11 - கி
கோ. கௌசல்யா, 12 - கி


## சிறப்பாசிரியர் உரை

மாணவர்களின் கவித் திறன் தொகுப்புகள் ஒருசேர்க்கப்பட்டு உரிய வடிவத்தில் வார்க்கப் பட்ட கையெழுத்து இதழ் பதிவுகள் அனைத்தும் அருமை. முதல் முயற்சியே நல் முதிர்ச்சியை உணர்த்துகின்றது. தொடர் பயிற்சி முறையான வழிகாட்டுதல் பல்சுவை பகுதிகளை உயிர்ப்புப் பெற செய்துள்ளது. முதுகலைத் தமிழாசிரியர் திரு. இரெ. சுப்பிரமணியன் அவர்களின் வழிகாட்டுதல், ஆசிரியர்களின் ஒத்துழைப்பு, மாணவர்களின் முயற்சி, ஆர்வம் இவைகளின் சரிவிகிதக் கலவை தெளிகோல்
மென்மேலும் வளர வாழ்த்துகள்

- தலைமையாசிரியர்

நெம்பிகோல் என்பது...

நெம்பிகோல் என்பது நீக்கமைகோல் ஆகும். இது கடைந்து நீரைய உருவாக்கும் ஒரு மரக்குச்சி. சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்ததைப் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.

மாணவர் ஒவ்வொருவரும் ஒரு நீக்கமை கோலைப் போன்றவர்கள் சிறுமையில் எளிமையாகக் காட்சி அளிப்பவர்கள், தேவை ஏற்படும்போது தம் அறிவு நெருப்பை வெளிப்படுத்தி வெளிச்சம் பாய்ச்சுவார்கள்! எனவே, இந்தக் கையெழுத்து இதழுக்கு நெம்பிகோல் என்று பெயரிட்டோம். அதுமட்டுமன்றி, ஞகர எழுத்தை முதலாகக் கொண்ட சொற்களை நகரமாக மாற்றிப் பேசும் சூழல் இருந்து வருகிறது. ஞாயம், நியாயமாக மாறியது; ஞெகிழி, நெகிழியாக மாறியது; ஞொள்ளை, நொள்ளையாக மாறியது; இப்படி பல சொற்களைக் குறிப்பிடலாம். அதுபோல ஞமலி, ஞவ்வல் உள்ளிட்ட சொற்கள் வழக்கு ஒழிந்தன. எனவே, பொருள் அடிப்படையிலும் சொல் அடிப்படையிலையும் பொருத்தமான பெயரை இவ்விதழுக்குச் சூட்டியுள்ளோம். ஞகரத்தில் தொடங்கும் சொற்களைக் காக்கவேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது.

## அண்ணல் தங்கோ



இவர் தனித்தமிழ் அறிஞரும் விடுதலைப் போராட்ட வீரரும் ஆவார். 1937-ல் உலகத்தமிழ் மக்கள் பேரவையைத் தொடங்கி தமிழர் உரிமை மாநாடுகளை நடத்தினார். 1927-இல் திருக்குறள் நெறி தமிழ்த்திருமணத்தை அறிமுகப்படுத்தி நடத்தினார். 1942 இல் தமிழ்நிலம் என்ற இதழைத் தொடங்கினார். தமிழ் மகள் தந்த செய்தி அல்லது சிறையில் நான் கண்ட கனவு உள்ளிட்ட நூல்கள் பலவற்றை எழுதியுள்ளார்.

## துளிப்பா

எப்போது வந்த நாரை
குளத்தில் மீன் தேடவில்லை
குளத்தையே தேடுகிறது!

பட்ட மரம்
உயிர் காத்தது
பொந்துக்குள் கிளிகள்!

வங்கை
வயல்களில்
வளமனை கற்கள்
உழவின் நடுகற்கள்!

எந்திரத் தேள் கொட்ட
வலியில் துடிக்கும் ஆறு
மணல் திருட்டு!

நத்தாங்கூட்டில்
மழையோசை
மிதக்கிடப் பாடலின் சாரல்
ஒமாரும் நண்டுகள் சட்டையில்

– த.ரெ. தமிழ்மணி


# முந்து தமிழ் - செவ்வாய்

சூரியக்குடும்பத்தில் உள்ள நான்காவது கோள் செவ்வாய். மேலைநாட்டினர் இக்கோளுக்கு போர்க்கடவுளின் பெயரைச் சூட்டினர். இதன் மேற்பரப்பில் இரும்பு ஆக்சைடு காணப்படுவதால் செந்நிறமாகக் காணப்படுகிறது. இதனை இன்றைய அறிவியல் கண்டறிந்து விளக்குவதற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிந்து செம்மை + வாய் = செவ்வாய் என அக்கோளின் நிறத்திற்கு ஏற்ப பெயரைச் சூட்டியுள்ளனர். மேலைநாட்டினரைப் போல கடவுளின் பெயரைச் சூட்டாமல் அறிவியல் அடிப்படையில் அமைந்திருப்பது தமிழரின் அறிவியல் பார்வைக்குச் சான்றாக அமைகிறது.



கெ.ஸ்ரீ.ஷாலினி
10 "அ"

ம. நிரவின்குமார்
'8'-அ



மண் மருத்துவர்கள்...
எட்டு மடங்கு
எடையை
இயல்பாய்ச்
சுமக்கும்
சாணி வண்டுகள்!


கு. சௌமியா
12 - ஆ

முதல் நாளும்
அழுகை...
இறுதி நாளும்
அழுகை...

பாடங்களைப் போல
எளிதாக
மறந்துவிட முடியாது
பள்ளி நாட்களை

இங்குதான்
தொழில் பேதம் மாறும்
மாணவர்கள்
ஆசிரியர்களாக...
ஆசிரியர்கள்
மாணவர்களாக!.

— சு. பூரணிமுத்து
11 "இ"

உண்ணும் உணவில்
மணக்கிறது
மண்ணின் மணம்

மண்ணில் நாம்
புதைந்து போனாலும்
மண் புதைவதில்லை..

மண்ணில்
மலர் வாழலாம்
ஆள்வது மண்ணே!

— இரா. பூஜா
11 "அ"

பாவாணர்



தேவநேயப் பாவாணர்

தேவநேயப் பாவாணர் சங்கரன் கோவில் மாவட்டத்தில் கோமதி முத்துபுரம் என்னுமிடத்தில் பிப்ரவரி 7-2-1902-இல் ஞானமுத்து பரிபூரணம் அம்மையார் அவர்களுக்கும் பிறந்தார். இவர் மிகச்சிறந்த தமிழறிஞரும், சொல்லாராய்ச்சி வல்லுநரும் ஆவார். இவருடைய ஒப்பரிய தமிழறிவும் பன்மொழியியல் அறிவும் கருதி சிறப்பாகப் பெருஞ்சித்திரனாரால் மொழிஞாயிறு தேவநேயபாவாணர் என்று அழைக்கப் பெற்றார். தமிழின் வேர்ச்சொல் வளத்தையும், செழுமையையும் காட்டக்கூடிய, அதன் வளர்ச்சிக்கான வழியையும் அவரின் நூல்களின் வழி வெளிக்கி எடுத்து இயம்பினார். இவர் மதுரையில் 15 சனவரி 1981-ல் இறந்தார்.

## செந்தமிழ் - புதன்

சூரியனுக்கு அருகில் உள்ள கோள் புதன், இதற்கு உரோம நாட்டின் தூதுக் கடவுளான மெர்க்குரியின் பெயரைச் சூட்டியுள்ளனர். புதிதாக அறியப்பட்ட கோள் என்பதால் அதற்கு தமிழில் அறிவன் என்று பெயர் சூட்டினர் தமிழ் வானவியல் அறிஞர்கள். அறிவன் என்பது மனிதர்களின் அறிவுத்தளத்தில் தாக்கம் ஏற்படுத்துவதாகக் கருதினார்கள். அந்த அடிப்படையிலும் அறிவன் என்று பெயர் அமைந்ததாகச் சிலர் கூறுவர். அறிவன் என்பதன் மொழிபெயர்ப்பே புதன் ஆகும். எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே - என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கேற்ப பொருள் அடிப்படையில் கோள்களுக்கு முன்னோர்களே பெயரிட்டிருப்பது தமிழின் தனிச்சிறப்பாகும்.

கவின் கான்..,



தூவெண் அருவி,
தேங்குவழ் வளி வீசும்,
அடர்ந்த பைம்பொழில்
உள்நுழை வழிகேட்டு
விழி பிதுங்கும்
ஞாயிறும் திங்களும்
பூம் வயல் உதித்த
தீம்பழ் பருக்கையில்
குயிலும் மாந்தி
சமிர் நீர் குவளை
எற்றிசை மணமொழுக
தள்ளாடும் தும்பி
திருநுதல் வரை கண்டு
இதழ் தடவும் கார் முகில்
சங்கச் சொற்கள் இமை வருட
இடறி எழுகிறேன்
வெறும் கற்களால்
முற்றுப்பெற்ற இன்றைய கான்.

— கோ. கௌதமன், முதுகலை ஆசிரியர்


ஜ. அபிநயா
11 ஆ

## புதுக்கவிதைகள்

கங்கை நதி
சிவனின் தலையில்
தோன்றுகிறது
அப்ப —
புவியியல் ஆசிரியர்
பொய் சொன்னாரா?

○

மரங்கள் அழிப்பு
மழைக் கொலை
மழைப் பாட்டில்
மண்.

○

அவசர அவசரமாய்
அடி மாடுகளை
விற்று
அரபு நாட்டுக்குப்
போனான்
ஒட்டகம் மேய்க்க!

- கலைபாரதி
மன்னார்குடி

## சி. இலக்குவனார்



பேராசிரியர் சி. இலக்குவனார் தமிழறிஞர்களில் தனிச் சிறப்பு வாய்ந்தவர். மொழியியல், இலக்கணம், தொல்காப்பிய ஆராய்ச்சி, திருக்குறள் ஆராய்ச்சி, சங்க இலக்கிய ஆராய்ச்சி எனப் பல்வேறு பொருள்களில் நிறைய நூல்கள் இயற்றியுள்ளார்.

1965 ஆம் ஆண்டில் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறைப்பட்டார். சங்க இலக்கியம் என்ற இதழை நடத்தியவர். இருபதுக்கும் மேற்பட்ட தமிழ் நூல்களையும் நான்கு ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளார். தமிழ் வாழ்ந்தால் தமிழகம் வாழும் என்ற நோக்கில் தமிழ்க் காப்பு கழகத்தை நடத்தினார்.


ரா.பூஜா
11 - ஆ

## தமிழ்

1. என் தாயைப்போல
தமிழையும் நேசிக்கிறேன்!
காரணம்
இரண்டுமே தெய்வமானது!

2. தித்திக்கும்
தேனைப் போல!
தெளிவாய்ச் சிரிக்கும்
மலரைப் போல
தமிழும் அழகின் உறைவிடம்தான்!

3. பசித்தால்
பாலைக் குடிப்பது
போல!
மனம் இனித்தால்
தமிழைப்படி!

4. கற்க கல்விக்கூடம் வேண்டாம்!
கலைநோக்கி போதும்!

5. தமிழ்!
இல்லை என்றால்!
தாயை இழந்த
பிள்ளை போலதான்
நாமும்!

6. தாமரை
இதழைப் போல
தமிழ் சிரிக்கும் வண்ணம்
இருக்கும்...
சிறகுகள் போலச்
சிதைக்கும் வண்ணம்
இருக்காது!

வான் கடலில்
நீந்தும்
மகிழைப் போல!
மொழிக்கடலில்
நீந்தும்
தமிழும் முதன்மை
தான்!

தமிழைச்
சொல்லாகத்
தாங்க விதையை
செயலாக
ஆள விடுவோம்!

— இர. பிரவீணா
12 'அ' பிரிவு

## முந்துதமிழ் - காரி

சூரியக்குடும்பத்தில் வியாழனுக்கு அடுத்த பெரிய கோள் சனி. சனிக்கோளின் சிறப்பு வளையம் பாறைத் துகள்களாலும் தூசிகளாலும் ஆனவை. மேலும் கந்தகப்புகைகள் காணப்படுவதால் கரிய நிறத்துடன் காணப்படும். மேல் நாட்டவர்கள் உரோமானிய வேளாண்மைக்கடவுளான சாட்டர்னைப் நினைவாகப் பெயரிட்டுள்ளனர். அத்தகைய நம்பிக்கையின் அடிப்படையில் பெயர் சூட்டாமல் நிறத்தின் அடிப்படையில் காரி என்று பெயர் சூட்டியிருப்பது தமிழனின் அறிவியல் பார்வைக்குச் சான்றாகும். சனி என்பது வடமொழிச் சொல். அதற்கு தமிழில் காரி என்று பெயர் என்பது குறிப்பிடத்தக்கது

# என் ஆசான் த. ச. தமிழனார்

- கிரா. சுப்பிரமணியன்
முதுகலைத்தமிழாசிரியர்

என் உடலும் உயிரும் பெற்றோரால் ஆனவை. அறிவு ஆசான்களால் ஆனது. எல்லா மழையிலும் எல்லா விதைகளும் எழுவதில்லை. அதுபோல எல்லா ஆசிரியர்களும் எல்லா மாணவர்களிடமும் தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை.

அந்த வகையில் படிப்பு வாசனை அறியாத பாமரனாய் எட்டாம் வகுப்பில் இருந்தபோது என்னை ஈர்த்தது ஆசிரியர் த.ச. தமிழனார்.

எட்டாவது பாடம் படிக்கலைனா மட்டும்
எதிர்த்த வீட்டு மாடு முட்டும்
-என்ற மோனை நடைப்

பேச்சு வகுப்பறையை அழகுபடுத்தும். மாணவர்களின் கையெழுத்துப் பயிற்சி ஏட்டில் பெயரை அவரே எழுதித் தருவார். பிறமொழிப் பெயராயின் மொழி பெயர்த்து மாணவரின் பெயரைத் தமிழில் எழுதித் தருவார். படைப்பிலக்கிய உணர்வு கொண்ட மாணவர்களைச் செதுக்கி உருவாக்குவார். கவிதை, பேச்சு, உரைநடை, நாடகம் என அனைத்துக் கலைகளையும் அவரே நேரிடையாக நின்று பயிற்சி தருவார். இயற்றமிழ்ப் பயிற்றகம் என்ற அமைப்பை நிறுவி ஆசிரியர்களையும் மாணவர்களையும் உருவாக்கினார்.

மறந்தும் பிறமொழிச் சொல் அவர் வாயில் வராது. பள்ளிச் சொற்கள் அனைத்தும், மாக்கட்டி, தூவல், குறிப்பேடு, என தமிழ்ச்சொற்கள் துள்ளும். தற்கால தனித்தமிழ் இயக்கத்தின் மாபெரும் செயல்மறவம் த.ச. தமிழனார். தனக்குக் கிடைத்த அறிவுப் புதையலை அள்ளி வழங்கியவர். என் தமிழ்த்தேடலைத் தொடங்கிவைத்தவர் ஒவ்வோர் ஆண்டும் திரு.வி.க பிறந்தநாள், பாவாணர் பிறந்தநாள் என விழா நடத்தி மாணவர்களை பங்கேற்கச் செய்தவர். அவர் செயல் கூற பக்கங்கள் போதா.

# பாவேந்தர்



பாரதிதாசன்:

பாரதிதாசன் ஏப்ரல் 29, 1891 இல் புதுச்சேரியில் பிறந்து பெரும் புகழ்படைத்த பாவலர். இவரின் பெற்றோர் கனகசபை இலக்குமி அம்மாள் அவர்கள். 1920-ஆம் ஆண்டு பழநி அம்மையார் என்பாரை மணந்து கொண்டார். இவர்களுக்கு மன்னர் மன்னன் என்ற மகனும் மூன்று மகள்களும் உள்ளனர். பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர் சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால் பாரதிதாசன் என்று தன் பெயரை மாற்றிக்கொண்டார். பாரதிதாசன் தம் எழுச்சி மிக்க எழுத்தால் புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் பரவலாக அழைக்கப்படுபவர். இவர் குயில் என்னும் பெயரில் கவிதை வடிவில் ஒரு திங்களிதழ் நடத்தி வந்தார். 1946 ஜூலை 29 இல் அறிஞர் அண்ணா அவர்களால் கவிஞர் 'புரட்சிக் கவி' என்று பாராட்டப்பட்டு ரூ.25,000 வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டார். புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராகவும் 1954-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 21-4-1964 இல் இயற்கை எய்தினார்.

-வெ. அபிநயா

## முயற்சி

10 'அ'

தோல்விகளைப் படிகளாக்கித்
தொடர்ந்து முயலுங்கள் - மனம்
சோர்ந்து சோகம் சூழ்ந்திடாமல்
மேலும் முயலுங்கள்....
வீழ்ந்து விட்டால் எழுவதற்கு
கால்கள் இல்லையோ....
வெற்றிகொள்ள நயந்து நெஞ்சில்
உரமும் இல்லையோ
அயர்ச்சி இன்றி முயற்சி
செய்திடவே
ஆகும் வெற்றியே!....

-கோ. கௌசி
11 அ பிரிவு


காவியா
11-அ

# உன்னால் முடியும்

- ப. அன்பரசன்
முதுகலை ஆசிரியர்

"சுமைகளைக் கண்டு
நீ துவண்டு விடாதே!
இந்த உலகத்தை சுமக்கும்
பூமியே உன் காலடியில் தான்!"

என்கிறார் விவேகானந்தர்.

வாழ்க்கை பாதை நேரானது அல்ல. அதில் வளைந்து நெளிந்துதான் பயணம் செய்ய வேண்டும். ஆற்றில் ஓடும் நீரானது தடைகளைக் கண்டு தயங்கி நிற்பதில்லை. ஒரு விதையானது தூக்கிவீசப்பட்டபோதும், மண்ணில் புதையுண்டபோதும், பூமியைப் பிளந்து கொண்டு பெரு மரமாக வெளியில் வருவது அவ்விதையின் தன்னம்பிக்கை ஆகும்.

நாணயத்திற்கு இரு பக்கங்கள் உண்டு; வெற்றிக்கும் இரு பக்கங்கள் உண்டு; அதுவே தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் ஆகும்.

"என் முயற்சிகள் என்னைப் பலமுறை கைவிட்டதுண்டு. ஆனால், நான் ஒருமுறை கூட என் முயற்சியைக் கை விட்டதில்லை." என்று தன் தன்னம்பிக்கை வெளிப்படுத்தினார்.

தாமஸ் ஆல்வா எடிசன். பாரா ஒலிம்பிக்
உலகசாதனை படைத்த மாரியப்பன்
தங்கவேலு. இவர் நேர்ச்சியில் ஒரு காலை
இழந்தவர். ஆனால், உயரத் தாண்டுதல்
போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

எதை வேண்டுமானாலும் அடைய ஆசைப்
படுங்கள்; ஆனால், அந்த ஆசை நியாயமானதாக
இருக்க வேண்டும். உங்களால் என்ன செய்ய
முடியும் என்பதை யாரும் தேர்வு செய்வதில்லை.
நீங்கள் இதுவரை என்ன செய்துள்ளீர்கள்?

"முடியாது என்பது என் அகராதியிலே
கிடையாது" என்கிறார் நெப்போலியன்.
மன வலிமையினால் மரணத்தையும் வெல்ல
முடியும். துப்பாக்கி ஏந்திய ஆங்கிலேயருக்கு
முன்பு வெற்றுக் கரங்களுடன் எதிர்த்து
நின்றதும் மகாத்மாகாந்தியின் தன்னம்பிக்கையே

ஹெலன் கெல்லர், அவள் கண்களில் ஒளி
இல்லை; அவள் காதுகளில் ஒலி இல்லை;
ஆனாலும், பல மொழிகளில் புலமைபெற்றாள்!

கை இல்லாதவன் கூட இவ்வுலகில் வாழ
முடியும்; ஆனால், தன்னம்பிக்கை இல்லாதவனால்
வாழ முடியாது. தோல்விக்கு ஆயிரம்
காரணங்கள் உண்டு; ஆனால் வெற்றிக்குக்
காரணம் தன்னம்பிக்கை மட்டுமே!

விழுந்த மரம்
எழுந்த விந்தை!




பன்னிரண்டு ஆண்டுக்கு முன் நான் இந்த பள்ளியில் காலடி வைத்தபோது நடு பெருங்காட்டுக்குள் வந்துவிட்டேனா என்று எனக்குள் ஐயம். வேம்பு, புங்கம், தூங்குமூஞ்சி, அரசு, தென்னை என பரந்து விரிந்திருந்தது இந்த கானகம்.

நான் அம்மரங்களை மரங்களாகப் பார்க்கவில்லை மாணவர்களாகத்தான் பார்த்தேன். இவையன்றி குமிழ்தேக்கு, இலுப்பை, வாகை, கொன்றை என நட்டு வளர்த்திருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் மாணவர்கள் படிப்பு முடிந்தவுடன் மாணவர்கள்

வெளியேற்றி விடுவர். எங்களோடு இருப்பது மரங்கள் மட்டுமே. பார்த்துப் பார்த்து வளர்த்தோம். அப்படியொரு பசுமை நேசம் எங்களின். இச்சூழலில் கஜா புயலில் வேரோடு பெயர்ந்த மரங்களைப் பார்த்ததும் வேதனையாக இருந்தது.

மரங்கள் துண்டாடப்பட்டுக் கொண்டிருந்தன. நான் புதைப் போய் அரசமரத்தை வெட்டும் போது தடுத்தேன். விழுந்த மரங்களுக்குப் பதிலாகப் புதிய மரங்கள் நட்டு வந்த வனம் தன்னார்வலமைப்புடன் இணைந்து இந்த அரச மரத்தை நிமிர்த்தி வைக்க நான் நினைத்து தூர்வாரி எந்திர உதவியுடன் பணியைத் தொடங்கினோம்.

மக்கள், தமிழ், சங்கம் மற்றும் இளைஞர்கள் கலந்து கூடி ஆசிரியர்கள் மாணவர்கள் புடை சூழ நிமிர்த்தி வைத்தோம். அப்போது வானமும் தூறியது, அரசமரத்தை வாழ்த்தியது போல இருந்தது.

சுற்றி இருந்த மாணவர்கள் எழுப்பிய ஒலி வீழ்ந்த அரசனை மீண்டும் அரியணையில் அமர்த்தியது போல் இருந்தது. சுற்றி நின்ற வேடிக்கை பார்த்த

மரங்கள் மகிழ்ச்சியில் தலை அசைப்பது போல் அல்ல. மாணவர்களுக்குப் பாடம் நடத்துவது ஆசிரியர் தான் என்று மட்டுமல்ல; விருந்தால் மரணம் அல்ல மருந்தால் வாழ்வு என எங்களுக்குப் பாடம் சொல்லி கம்பீரமாக நிற்கிறது அரச மரம்.

– ந.குமார், உதவித்தலைமையாசிரியர்

## மொழித்தூய்மை

அயல்மொழிச் சொற்களை ஏராளமாக நம் மொழியில் கலந்து ஆள்வதால் நூற்றுக் கணக்கான வடசொற்களும் அயல்மொழிச் சொற்களும் தமிழில் கலந்தன. அதனால் நூற்றுக்கணக்கான தமிழ்ச்சொற்கள் மறைந்தே போயின.

– மறைமலையடிகள்

நாம் உருசிய மொழியைக் கெடுக்கிறோம் தேவையின்றிப் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துகிறோம்.

– லெனின்

மொழித் தூய்மைக்கான போராட்டம்... பண்பாட்டுக் கருவிக்கான போராட்டம்!

– மக்சிம் கார்க்கி

# எது கவிதை?

கவிதை ஒன்று வேண்டும் என்றார்
தமிழ் ஐயா!
தலைப்பு குழந்தை
கவிதைக்கு, கவிதையாய்
கவிமுறை எங்கே காண்பேன்
பிறை மலை போல்
நீர்தூக்கும் சிறு நுதல்
தடாகத் தாமரையில்
தத்தளிக்கும்
கருங்குவளைக் கண்கள்!
கரையில் பூக்கும்
பன்னீர் பூக்கள் ஒன்றாகி!
கொவ்வை வாயிதழின்
செங்காந்தள் பூக்கள்
உன் சிரிப்பு!
அதில் மகரந்தம் எங்கே
மனமெல்லாம் அங்கே!
செந்தூரக் கன்னங்களின்
பணிலக்கு ஓசையின்
அதிகாலை விடியல்...
மொட்டு கையில்
மாராப்பு சேலை
பிடித்திருக்கும் உன் கைகள்!

உன் பிஞ்சு பாதங்கள்
மெத்தையின் மென்மையும்
தாய்மையின் தனிச்சிறப்பை
அறிய வைத்த அட்சதையே!
நிறைந்தும் நிறையாத
கிண்கிணி சலங்கையின்
ஓசை உன் சிரிப்பு!
உலகமே மறந்தது என் பிறப்பு
இவ்வளவு நாள் தேடிய என்
கேள்விக்குறிக்கு பதில் கிடைத்தது
இன்பம் - குழந்தை
இனிமை - குழந்தை
துன்பம் மறக்கும் மருந்து
குழந்தை!

- திருமதி. ந. மலர்க்கொடி
பட்டதாரி ஆசிரியர்



இலக்கிய மன்ற நிறைவு விழா








இலக்கிய




தமிழ் மன்றம்

## முந்து தமிழ் - திங்கள்

தமிழன் அறிவியலில் சிறந்து விளங்கியிருக்கிறான். அதனை நாம் அறியாமல் இருக்கிறோம். நாம் கண்டறிந்தவற்றைச் சொற்களில் பொதிந்து வைத்திருக்கிறான். இதற்கு சான்றாகப் பலவற்றைக் குறிப்பிடலாம். அவற்றுள் தமிழன் வானவியலில் கண்டறிந்தவற்றை இங்கு காணலாம்.

தகு என்பதற்கு ஒளி என்று பொருள். அந்த தகு என்பது

தகு → திகு → திங்கு → திங்கள்

என்று உருவாகிறது

ஆக, திங்கள் என்னும் சுணைக்காரருக்கு, ஒளி வீசுதல் என்ற பொருளில் அக்காலத்திலேயே அறிவுவழிப்பட்டு பெயர் சூட்டியிருப்பது வியப்பிற்குரியது.



- தி. சாங்கவி

12 "அ"

# கல்லாங்காய் விளையாட்டு

- சி.தீபிகா, 8'அ

ஆளா பொறுக்கி அவளோட செறுக்கி
சின்னம் பெருக்கி சீரி புள்ள காச்சி
காச்சினா காச்சி மதுர மீனாட்சி
இரிகோ ராகவா இளந்தம்பி ராகவா
மண்ணாடி மன்னவா
முக்குட்டு சிக்குட்டு மூன்றாம் படிகட்டு
ஙாங்குத்து ராசா பெங்குத்த போனாணாம்
ஜப்பான் அரக்கு பம்பாய் சிலுக்கு
அக்குரு மச்சான் தோப்புல
அழுகுமான்டி மாப்புள
ஏழுன்ன எங்கண்ணன் எழுதத்துக்கு முத்தண்ணன்
கருக்கொடு வாசிப்பான்
எட்டாச்சி எட்டாச்சி ஏக புரட்டாசி
தம்பி பிறந்து தடபுடலாச்சி
பேரன் பிறந்து பெருந்தன்மையாச்சி

(தொடரும்)



ஸ்ரீராம்
11 "அ"






## சிறுவர்கள் விளையாடும் விளையாட்டுகள்

| | | |
|---|---|---|
| கபடி | உப்பு விளையாட்டு | ஆடுபுலி ஆட்டம் |
| பல்லாங்குழி | கண்கட்டி விளையாட்டு | கில்லி |
| கிட்டிப்புள் | கித்து விளையாட்டு | கண்ணாமூச்சி |
| சிலம்பம் | நொண்டி விளையாட்டு | குமிழுத்து |
| பம்பரம் | கிந்து விளையாட்டு | வெயிலா நிலா |
| பச்சைக் குதிரை | கல்லாங்காய் விளையாட்டு | கல்லா மண்ணா |
| தாயக்கட்டை | | |

## தூய தமிழ் - வியாழன்

சூரிய குடும்பத்தில் மிகப்பெரிய கோள் வியாழன். அதைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிந்தவன் தமிழன். அதனால்தான் பெரிய என்னும் பொருள் தரும்படி வியாழன் என அக்கோளுக்குப் பெயர்வைத்தான்.

வியல் என் கிளவி அகலப் பொருட்டே

- என்பார் தொல்காப்பியர்.

வியல் என்பதற்கு அகலம் என்பது பொருள். இதைத் திருக்குறளிலிருந்தும் உணரலாம்.

தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

- என்ற குறளில் வியனுலகம் அகன்ற உலகம் என்ற பொருளில் ஆளப்படுகிறது.

அதுபோல அழன் என்பதற்கு அழகானது என்பது பொருள் என சொல்லித் தெரியவேண்டியதில்லை.

அகலமானதும் அழகானதும் ஆகிய கோள், வியல் + அழன் வியாழன் என்றானது. கோளின் அளவு அறிந்து பெயர் சூட்டியமை வியப்பிற்கு உரியது.

## பாம்பன் அடிகள்



பாம்பன் அடிகள் (1851-1929) தமது நீண்ட வாழ்வில் சைவசமயம் பற்றியும், முருகனைப் பற்றியும் தமிழைப் பற்றியும் எழுதிய நூல்கள் மிகப்பல. வடமொழி ஆதிக்கம் மிகுந்த அந்த காலத்தில் வடமொழி கலப்பின்றி அடிகளார் எழுதிய நூல்தான் "சேந்தன் செந்தமிழ்". "தாய்மொழி தமிழாக இருந்தும் தமிழில் பேசுவதைத் தாழ்வாகக் கருதுவோர், தம் உணவைத் தாமே இகழ்பவர்" என்ச் சாடுகிறார். வேர்ச்சொல் ஆய்வில் ஞானப்பிரகாசருக்கு முன்னோடியாவார்.

## துளிப்பா

அவசரக் காற்று
முதல் மழை
புளியம் பூக்கள்.

மழைவிட்ட நேரம்
தேங்கிய நீரில் முகம் பார்த்து
தெருவிளக்கு.

விற்பனையாயில்
வண்ணத்துப் பூச்சி
துறக்கிறது பூச்செடி.

தாய்க்காகக்
காத்திருக்கிறன்
மரத்தில் காய்ந்தபழம்.

அகதி முகாம்
மழையில் வருகிறது...
மண் வாசனை!

மரம் வெட்டும் கோடரி
பார்த்துக்கொள்
கடைசி மழைத்துளி

- கே. அறிவுமதி

## திருக்குறள்


இரு வரி
அலைகள்
கால் நனைத்து
உள்ளே சென்றால்
காணலாம்
கருத்துக் கடல்!

இருவரி கவிதை
உலகையே அடக்கும்!
அதன்வழி நடந்தால்
வாழ்க்கையும் இனிக்கும்!

குறள் எல்லாம் படித்தால்
புது அனுபவம் கிடைக்கும்!
உலக மொழி அனைத்தும்
தமிழையே வணங்கும்!

வள்ளுவன் வாய்மை
இவ்வையம் பரவும்!
திருக்குறளின் புகழை
உலகம் போற்றும்!

ச. கிருத்திகா
11 "ஆ"



கா. தமிழ்
11 - ஆ

தமிழ்த்தென்றல் திரு.வி.க

திரு.வி.க சிறந்த தமிழறிஞர், மேடைப்பேச்சாளர், நூலாசிரியர், தொழிற்சங்கவாதி. அவர் வாழ்க்கை வரலாற்று நூல்கள், அரசியல் நூல்கள், பாடல் நூல்கள், பயண இலக்கிய நூல்கள் என்ற வரிசையில் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் புகழ்பெற்றது முருகன் அல்லது அழகு. இவரது தமிழ் நடையின் காரணமாகத் தமிழ்த்தென்றல் என அழைக்கப்பட்டார்.

## நறுக்குகள்

ஆயிரம் ஆண்டுகள்
வண்டி இழுக்கிறது
கொம்பை மறந்த மாடு

அம்மா என்றது
மாடு
மம்மி என்றான்
மனிதன்

சொந்த வீடு
கட்டுகிறது குருவி
நான் குடியிருக்கும்
வாடகை வீட்டின்

பெண்கள் -
ஊர்களில்
முன்பக்கத்தில்
வீடுகளில்
பின்பக்கத்தில்

அடக்கம் செய்யப்படுகிறோம்
இரண்டு பெட்டிகளில்
சவ பெட்டியிலும்
தொலைக்காட்சி பெட்டியிலும்

- காசி ஆனந்தன்

## சொல்வளம்

1. இலை

இலை - வாழை, மா
தாள் - நெல், கேழ்வரகு
தோகை - கரும்பு, பெருஞ்சோளம்
ஓலை - தென்னை, பனை

2. பூவின் நிலைகள்

அரும்பு -
போது
முகை
மலர்
வீ
செம்மல்

3. பிஞ்சு

மாம்பிஞ்சு - வடு
பலாப்பிஞ்சு - மூசு

4. மாலை

கண்ணி - இருப்பூமாலை
கார் - கட்டிமாலை
தொங்கல் - தொங்கவிட்டுக் கட்டுதல்
ஆரம் - முத்துமாலை
சூட்டு - நெற்றிமாலை
சிகழிகை - உச்சிமாலை

## இடைக்கால பாண்டியர்கள்

கடுங்கோன் - கி.பி 575-600
அவனி சூளாமணி - 600-625
செழியன் சேந்தன் - கி.பி 625-640
அரிகேசரி - கி.பி 640-670
ரணதீரன் - கி.பி 670-710
பராங்குசன் - கி.பி 710-765
பராந்தகன் - கி.பி 765-790
ஸ்ரீமாறன் - கி.பி 792-835
சீவல்லபன் - கி.பி 835-862
வரகுணவர்மன் - கி.பி 862-880
பராந்தக பாண்டியன் - கி.பி 880-900

## பிற்கால பாண்டியர்கள்

மூன்றாம் இராசசிம்மன் - கி.பி 900-945
அமர புயங்கன் - கி.பி 930-945
சீவல்லப பாண்டியன் - கி.பி 945-955
வீரபாண்டியன் - கி.பி 946-966
வீரகேசரி - கி.பி 1065-1070
மாறவர்மன் சீவல்லபன் - கி.பி 1132-1162
சடையவர்மன் பராந்தக சீவல்லபன் - கி.பி 1145-1150
பராக்கிரம பாண்டியன் - கி.பி 1150-1160
சடையவர்மன் பராந்தக பாண்டியன் - கி.பி 1150-1162
சடையவர்மன் குலசேகர பாண்டியன் - கி.பி 1162-1175
சடையவர்மன் வீரபாண்டியன் - கி.பி 1175-1180
விக்கிரம பாண்டியன் - கி.பி 1180-1190
முதலாம் சடையவர்மன் குலசேகரன் - கி.பி 1190-1218
முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் - கி.பி 1251-1271

காலம் தோறும் தமிழ் மன்னர்கள்...

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி.பி 1239 - 1251
சடையவர்மன் விக்கிரமன் - கி.பி 1241 - 1254
முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் - கி.பி 1251 - 1271
இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் - கி.பி 1251 - 1281
முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன் - கி.பி 1268 - 1311
மாறவர்மன் விக்கிரம பாண்டியன் - கி.பி 1268 - 1281
இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் - கி.பி 1276 - 1293

தென்காசிப் பாண்டியர்கள் :

மூன்றாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் கி.பி 1429 - 1473
சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் கி.பி 1422 - 1463
அழகன் பெருமாள் பராக்கிரம பாண்டியன் கி.பி 1473 - 1506
குலசேகர பாண்டியன் - கி.பி 1479 - 1499
சடையவர்மன் சீவல்லப பாண்டியன் - கி.பி 1534 - 1543
பராக்கிரம குலசேகரன் நெல்வேலி மாறன் கி.பி 1552 - 1564
சடையவர்மன் அதிவீரராம பாண்டியன் கி.பி 1564 - 1604
வரதுங்க பாண்டியன் - கி.பி 1588 - 1612
வரகுண ராம பாண்டியன் - கி.பி 1588 - 1612
கொல்லம் கொண்டான் (தகவல் இல்லை

(— தொடரும் ...)

— த. ஜெயந்திரன்
பட்டதாரி ஆசிரியர்

## அறிஞர் அண்ணல் தங்கோ



கு.மு. அண்ணல் தங்கோ தனித்தமிழ் அறிஞரும், இந்திய விடுதலைப் போராட்டச் செயற்பாட்டாளரும் ஆவார். இவர் வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் ஏப்ரல் 12, 1904ல் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் 'சுவாமி நாதன்' தொடக்கக்கல்வி மட்டுமே பயின்ற இவர் தமது முயற்சியால் தமிழ் உள்ளிட்ட பல மொழிகளில் புலமை பெற்றார். இவர் மக்களுக்கான போராட்டங்களில் கலந்துகொண்டு 5 முறைகள் சிறை சென்றுள்ளார். திரைப் படங்களுக்கும் பாடல்கள் எழுதி உள்ளார். வாழ்நாள் முழுவதும் திருக்குறள் நெறியைப் பரப்பவும் தனித்தமிழை வளர்க்கவும் பாடுபட்ட கு.மு. அண்ணல் தங்கோ சனவரி 4, 1974-ஆம் தேதி இறந்தார். அவருடைய படைப்புகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

- வெ. அபிநயா
10 'அ'

### கடிகாரம்

கடிகாரத்தின் முள்
எந்த நிலை வந்தாலும்
ஓடிக்கொண்டிருக்கும்
அதுபோல
என்ன துயரம் வந்தாலும்
நீயும் ஓடிக் கொண்டிரு!



## முந்துதமிழ் - வெள்ளி

சூரியத்தொகுதியிலேயே அதிக அளவு வெப்பநிலையைக் கொண்ட கோள். அதன் வளிமண்டலம் வெப்பம் மிகுதியாக அமையப்பட்டது. உரோம் மக்களின் பெண் கடவுளின் பெயரான வீனஸ் என்பதனைச் சூட்டியுள்ளார்கள். வெள்ளி என்பதை 'வெண்மீன்', "சீர்சால் வெள்ளி" என்று பலவாறு சங்கப்பாடல்களில் சூட்டப்பெற்றுள்ளது. தமிழில், நம்பிக்கையின் அடிப்படையில் கடவுளின் பெயரைச் சூட்டாமல் - வெண்மையாக ஒளிரும் நிறத்தின் அடிப்படையில் வெள்ளி என்று பெயர்சூட்டியிருப்பது, தமிழன் அறிவியல் முன்னோடி என்பதற்கு சான்றாகும்.

### மறைமலை அடிகள்

இவர் தமிழ், ஆங்கிலம், வடமொழி அறிந்த தமிழ் அறிஞர். தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கி வளர்த்தவர். ஐம்பத்து நான்கு நூல்களை எழுதியவர். தமிழின் மீது கொண்ட பற்றினால் வேதாசலம் என்ற தம் பெயரை மறைமலை என்று மாற்றிக்கொண்டார். வடமொழி பெயர்களான திருஞானசம்பந்தத்தை அறிவுத் தொடர்பு என்றும் மாணிக்கவாசகத்தை மணிமொழி என்றும் சுந்தரமூர்த்தியை அழகுரு என்றும் திரிபுரசுந்தரி என்பதை முந்நகரழகி என்றும் தனித்தமிழில் மாற்றினார். பரிதிமாற் கலைஞரும் மறைமலை அடிகளும் தனித்தமிழ் இயக்கத்தின் இரு கண்கள்.



## யானைப் புயல்


நாலு போகம் விளைஞ்ச நிலம்
நாசமா போயிடுச்சு!
நஞ்சை புஞ்சை எல்லாமே
நிலை குலைஞ்சு போயிடுச்சு!

தேரு போல - இருந்த தேக்கு
தெருவோரம் சாஞ்சிடுச்சு!
கனவு போல வந்த கஜா
காட்டையெல்லாம் கொண்டு போச்சு

வேதனையில் வெந்த மனம்
வெம்பி வெம்பி அழுதிடுச்சு
சாதனையா மக்களெல்லாம்
கையேந்த வச்சிடுச்சு!

- மு. சங்கரி, 11 "அ"





## அயோத்திதாசர்

தென்னிந்தியாவின் முதல் சாதி எதிர்ப்புப் போராளி; தமிழறிஞர்; சித்த மருத்துவர்; அயோத்திதாசர் ஆவார். இவருடைய தாத்தா கந்தப்பன், திருக்குறள் ஓலைச்சுவடிகளை எல்லிசு துரையிடம் வழங்கியதால் தான் நமக்கு திருக்குறள் அச்சுநூல் கிடைத்தது. 1907 ஆம் ஆண்டு ஒருபைசா தமிழன் என்ற இதழை நடத்தினார். நீலகிரியில் பழங்குடி மக்களை ஒன்றாக்கி அமைப்பு ஆக்கம் செய்தார். அக்காலத்தில் இவரது கருத்து மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியது எனலாம்.



## பரிதிமாற் கலைஞர்

பரிதிமாற் கலைஞர் என்னும் தனித்தமிழ் அறிஞர் இயற்பெயர் வி.கோ. சூரியநாராயணன் சாஸ்திரியார், கோவிந்த சிவன் - இலட்சுமி அம்மாள் இணையருக்கு ஜூலை 6, 1870-ஆம் ஆண்டு மதுரையில் விளாச்சேரியில் பிறந்தார். இவர் ஒரு தமிழறிஞரும், நூலாசிரியரும், தனித்தமிழ் இயக்க முன்னோடிகளில் ஒருவரும் ஆவார். இவர் பெரிய செந்தமிழ் நடையில் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர். நாடகப் புலமை சான்றவர். 'தமிழ் மொழி வரலாறு' போன்ற ஆய்வு நூல்களையும், கலாவதி, ரூபாவதி போன்ற நாடக நூல்களையும், நாடக இலக்கணமான நாடகவியலையும் இயற்றியவர் இவர். தமிழ்மொழி மீது கொண்ட பற்றினால் தமது பெயரை வடமொழி கலக்காத தூய தமிழில் பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிக்கொண்டார். இவர் சென்னையில் நவம்பர் 2, 1903ல் இறந்தார்.

- வெ. அபிநயா

10 'அ'

---

## பள்ளி

பள்ளி இருக்கும் இடம்
சாதிகள் இல்லாத கூடம்
பள்ளி மாறி போனாலும்
கல்வி மாறி போகாது

## கடல்

கடல் அலைகளைப் போல
வேகமாகச் செல்...
கிணற்று நீர்போல் தேங்கி
நிற்காதே!

-பு. சரண்யா

11 'அ'

# செங்காந்தள் தமிழ் இலக்கிய மன்றம்

கிளிக்கரை அரசு மேல்நிலைப்பள்ளியில் 2008-ஆம் ஆண்டு செங்காந்தள் தமிழ் இலக்கிய மன்றம் தொடங்கப்பட்டது. மாணவர்களுக்கு மாலை நேர விழாவாகவும் வெளியில் நடைபெறும் போட்டிகளுக்குப் பயிற்சிக்களமாகவும் அது அமைந்து வந்தது. மாணவர்கள் வெளியில் நடக்கும் போட்டிகளில் ~~மாணவர்கள்~~ வெள்ளிப் பரிசுகள் உள்ளிட்ட வெற்றியைக் குவித்து வந்தனர். உச்சபட்சமாக மாவட்ட அளவில் நடைபெறும் கவிதைப் போட்டிகளில் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் ரூ 10,000 பரிசு பெற்றுள்ளார்கள். பள்ளித் தலைமை ஆசிரியராக திரு. கி. நாகராஜன் அவர்கள் பொறுப்பேற்றவுடன் இலக்கிய மன்றம் மாலை நிகழ்வாக இருந்ததை ஒரு நாள் நிகழ்வாக மாற்றினார். காலை முழுவதும் மாணவர் அரங்கமாகவும் மாலை முழுவதும் ஆசிரியர் அரங்கமாகவும் நடைபெறத் தொடங்கியது. இலக்கிய மன்றப் போட்டிகளில் வென்றவர்களுக்கு வேறு எந்த அரசுப் பள்ளியிலும் வழங்கப்படாத அளவிற்கு தமிழறிஞர்கள் படம் பொறித்த சான்றிதழ் வழங்கப்படுகிறது. அச்சான்றிதழை உடற்கல்வி ஆசிரியர் திரு. செ. இரவி அச்சடித்து நன்கொடையாக வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

விழாவின் சிறப்பு விருந்தினராகப் பல்கலை வித்தகர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் கலந்துகொண்டு உரையாற்றி உள்ளனர். அதுமட்டுமன்றி தமிழ்மன்றம் வாரந்தோறும் சிறப்பாகத் தமிழ் ஆசிரியர்களால் நடத்தப்பட்டு வருகிறது. இவ்விழாக்கள் கவியரங்கம், பட்டிமன்றம், நாடகம், பேச்சு பாட்டு என முழுக்க முழுக்க மாணவர்களை மையப்படுத்தியே நடைபெற்று வருகிறது.

---

பெருஞ்சித்திரனார்

கெடுப்பதில்லை பிறர் பால் அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை மொழியையும் நாட்டையும் ஆளுமன்
துஞ்சுவதில்லை எனவே தமிழர் தோள் எழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர் நின்றே!

- என்று முழங்கிய பாவலரேறு

பெருஞ்சித்திரனார் பாவாணர் வழி வந்தவர். தமிழர் உரிமைப் போராட்டங்களில் பணிபுரிந்து வந்த அஞ்சலகப் பணியைத் துறந்தார். தனித்தமிழ் அறிஞரான இவர் 40க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.





செ. நிலாதேவி
ஓவிய ஆசிரியர்



- மெய்க்கீர்த்திகள்
- குடவோலை முறை
- மன்னராட்சியில் மக்களாட்சி
- ஈழ வெற்றி
- திருமுறை மீட்பு
- பெருஉடையார் கோயில்
- நில அளவை
- இன்னும் பெருஞ்சாதனை

அதுதான்...

இராசராசச்சோழன்!

## சிறப்பாசிரியர்

திரு. தி. நாகராஜன்,
தலைமை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி
விளிக்கரை - 613 704
திருவாரூர் மாவட்டம்

## ஆசிரியர்

திரு. இரெ. சுப்பிரமணியன்,
முதுகலைத் தமிழாசிரியர்,

## இணை ஆசிரியர்

திருமதி. ந. மலர்க்கொடி,
பட்டதாரி தமிழாசிரியர்

## முன்அட்டை

வி. ராஜா, ஓவியஆசிரியர்

## பின் அட்டை

கை. சுடரொளி
பட்டதாரி ஆசிரியர்

## எழுத்தாக்கம்

மு. அனுசியா, 11 - கி.
மு. சூர்யாதேவி, 11 - கி
அ. பூமணிமுத்து, 11 - இ
கோ. கௌசல்யா, 12 - கி

## சிறப்பாசிரியர் உரை

மாணவர்களின் கவித் திறன் தொகுப்புகள் மெருகேற்றப்பட்டு உரிய வடிவத்தில் வார்க்கப் பட்ட கையெழுத்து இதழ் பதிவுகள் அனைத்தும் அருமை. முதல் முயற்சியே நல் முதிர்ச்சியை உணர்த்துகின்றது. தொடர் பயிற்சி முறையான வழிகாட்டுதல் பல்சுவை பகுதிகளை உயிர்ப்புப் பெற செய்துள்ளது. முதுகலைத் தமிழாசிரியர் திரு. இரெ. சுப்பிரமணியன் அவர்களின் வழிகாட்டுதல், ஆசிரியர்களின் ஒத்துழைப்பு, மாணவர்களின் முயற்சி, ஆர்வம் இவைகளின் சரிவிகிதக் கலவை தெளிகோல்

மென்மேலும் வளர வாழ்த்துகள்

- தலைமையாசிரியர்

ஞெலிகோல் என்பது ...

ஞெலிகோல் என்பது தீக்கடைகோல் ஆகும். இது கடைந்து தீயை உருவாக்கும் ஒரு மரக்குச்சி. சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்ததைப் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.

மாணவர் ஒவ்வொருவரும் ஒரு தீக்கடை கோலைப் போன்றவர்கள். சிறுமையில் எளிமையாகக் காட்சி அளிப்பவர்கள், தேவை ஏற்படும்போது தம் அறிவு நெருப்பை வெளிப்படுத்தி வெளிச்சம் பாய்ச்சுவார்கள்! எனவே, இந்தக் கையெழுத்து இதழுக்கு ஞெலிகோல் என்று பெயரிட்டோம். அதுமட்டுமன்றி, ஞகர எழுத்தை முதலாகக் கொண்ட சொற்களை நகரமாக மாற்றிப் பேசும் சூழல் இருந்து வருகிறது. ஞாயம், நியாயமாக மாறியது; ஞெகிழி, நெகிழியாக மாறியது; ஞொள்ளை, நொள்ளையாக மாறியது; இப்படி பல சொற்களைக் கூறிவிடலாம். அதுபோல ஞமலி, ஞெலிகோல் உள்ளிட்ட சொற்கள் வழக்கு ஒழிந்தன. எனவே, பொருள் அடிப்படையிலும் சொல் அடிப்படையிலையும் பொருத்தமான பெயரை இவ்விதழுக்குச் சூட்டியுள்ளோம். ஞகரத்தில் தொடங்கும் சொற்களைக் காக்கவேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது.